www.manthiras.com

ஓம் குமாரகுருப்யோ நம:

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீபாம்பன்-ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள்
அருளிய

# ஷண்முக கவசம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அண்டமாய் அவனி ஆகி அறியொணாப் பொருள் அது ஆகி
தொண்டர்கள் குருவும் ஆகி துகள் அறு தெய்வம் ஆகி
எண்திசை போற்ற நின்ற என் அருள் ஈசன் ஆன
திண்திறல் சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க

ஆதியாம் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக் காக்க
தாது அவிழ் கடப்பந் தாரான் தான் இரு நுதலைக் காக்க
சோதியாம் தணிகை ஈசன் துரிசு இலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க

இரு செவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க, வாயை
முருகவேள் காக்க, நாப்பல் முழுதும் நற் குமரன் காக்க
துரிசு அறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ரமணியன் காக்க

ஈசனாம் வாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க
தேசு அறு தோள்விலாவும் திருமகள் மருகன் காக்க
ஆசு இலா மார்பை ஈர் ஆறு ஆயுதன் காக்க, எந்தன்
ஏசு இலா முழம் கை தன்னை எழில் குறிஞ்சிக்கோன் காக்க

உறுதியாய் முன்கை தன்னை உமை இள மதலை காக்க
தறுகண் ஏறிடவே என் கைத் தலத்தை மாமுருகன் காக்க
புறம் கையை அயிலோன் காக்க, பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்கு(ம்) மால்மருகன் காக்க, பின் முதுகைச் சேய் காக்க

ஊண் நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்தியோன் காக்க, வம்புத்
தோள் நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க, குய்ய
நாணினை அங்கி கௌரி நந்தனன் காக்க, பீஜ
ஆணியைக் கந்தன் காக்க, அறுமுகன் குதத்தைக் காக்க

www.manthiras.com

எஞ்சிடாத இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க
அம்ச கனம் ஓர் இரண்டும் அரன் மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருள் காங்கேயன் விளரடித் தொடையைக் காக்க
செஞ்சரண் நேச ஆசான் திமிரும் முன் தொடையைக் காக்க

ஏரகத் தேவன் என் தாள் இரு முழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தனனைச் சீரலை வாய்த்தே காக்க
நேருடைப் பாடு இரண்டும் நிகழ் பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க

ஐ உறு மலையன் பாதத்து அமர் பத்து விரலும் காக்க
ஐப உறு பழநி நாத பரன் அகம் காலைக் காக்க
மெய் உடல் முழுதும்இ ஆதி விமல சண்முகவன் காக்க
தெய்வநாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக் காக்க

ஒலி எழ உரத்த சத்தத் தொடு வரு பூத ப்ரேதம்
பலி கொள் இராட்சதப் பேய் பல கணத்து எவை ஆனாலும்
கிலிகொள எனைவேல் காக்க, கெடுபரர் செய்யும் சூன்யம்
வலி உள மந்த்ர தந்த்ரம் வருத்திடாது அயில்வேல் காக்க

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணி வில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எ.்.கம் தடிபரசு ஈட்டி ஆதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர் என் மேலே ஓச்சின்
தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்க காக்க

ஔவியம் உளர் ஊன் உண்போர் அசடர் பேய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கள் எவர் ஆனாலும் திடமுடன் எனை மல் கட்டத்
தவ்வியே வருவார் ஆயின் சராசம் எலாம் புரக்கும்
கவ்வுடைச் சூர சண்டன் கை அயில் காக்க காக்க

கடுவிடப் பாந்தன் சிங்கம் கரடி,நாய்,புலி,மான்,யானை
கொடிய கோணாய்,குரங்கு கோலமார்ச் சாலம் சம்பு
நடை உடை எதனாலேனும் நான் இடர்ப் பட்டிடாமல்
சடிதியில் வடிவேல் காக்க சானவி முளைவேல் காக்க

www.manthiras.com

www.manthiras.com

ஙகரமே போல் தழீஇ ஞானவேல் காக்க வன்புள்
சிகரி தேள் நண்டுக் காலி செய்யன் ஏறு ஆலப் பல்லி
நகமுடை ஓந்தி பூரான் நளிவண்டு புலியின் பூச்சி
உகம் இசை இவையால் எற்கு ஓர் ஊறு இலாது ஐவேல் காக்க

சலத்தில் உய்வன்மீன் ஏறு தண்டுடைத் திருக்கை, மற்றும்
நிலத்திலும் ஜலத்திலும் தான் நெடுந்துயர் தரற்கே உள்ள
குலத்தினால், நான் வருத்தம் கொண்டிடாது அவ்வவ் வேளை
பலத்துடன் இருந்து காக்க, பாவகி கூர்வேல் காக்க

ஞமலியம் பரியன் கைவேல், நவக்கிரகக் கோள் காக்க
சுமவிழி நோய்கள், தந்த சூலை, ஆக்கிராண ரோகம்,
திமிர்கழல் வாதம், சோகை, சிரமடி கர்ண ரோகம்
எமை அணுகாமலே பன்னிரு புயன் சயவேல் காக்க

டமருகத்து அடிபோல் நைக்கும் தலை இடி, கண்ட மாலை
குமுறுவிப் புருதி, குன்மம், குடல்வலி, ஈழை காசம்,
நிமிர ஒணாது இருத்தும் வெட்டை நீர் பிர மேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று எறிந்தவன் கைவேல் காக்க

இணக்கம் இல்லாத பித்த எரிவு, மாசுரங்கள், கைகால்
முணக்கவே குறைக்கும் குஷ்டம் மூலவெண் முளைதீ மந்தம்
சுணத்திலே கொல்லும் ஜன்னி சாலம் என்று அறையும் இந்தப்
பிணிக்குலம் எனை ஆளாமல் பெரும் சக்திவடிவேல் காக்க

தவன மாரோகம், வாதம், சயித்தியம், அரோசகம் மெய்
சுவறவே செய்யும் மூலச் சூடு இளைப் புடற்று, விக்கல்,
எவையும் என் இடத்து எய்தாமல் எம்பிரான் திணிவேல் காக்க

நமைப்புறு கிரந்தி, வீக்கம் நணுகிடு பாண்டு, சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை ஆகுபல் தொழுநோய் கக்கல்
இமைக்கும் முன் உறுவலிப்போடு எழுபுடைப் பகந்த(ர)ாதி
இமைப் பொழுதேனும் என்னை எய்தாமல் அருள்வேல் காக்க

பல் அது கடித்து மீசை படபட என்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி

எல்லினும் கரிய மேனி எமபடர் வரினும் என்னை
ஒல்லையில் தார காரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க

மண்ணிலும் மரத்தின் மீதும் மலையிலும் நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதும் சாரிசெய் ஊர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தின் உள்ளும் வேறு எந்த இடத்தும் என்னை
நண்ணி வந்து அருளார் சஷ்டிநாதன்வேல் காக்க காக்க

யகரமே போல் சூல் ஏந்தும் நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலாம் ஈர் ஆறு அம்பகன் வேல்பின் காக்க
சகரமோடு ஆறும் ஆனோன் தன் கைவேல் நடுவில் காக்க
சிகரம் இன் தேவ மோலி திகழ் ஐவேல் கீழ்மேல் காக்க

ரஞ்சித மொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல் கிழக்கில் திறமுடன் காக்க, அங்கி
விஞ்சிடு திசையின் ஞான வீரன்வேல் காக்க, தெற்கில்
எஞ்சிடாக் கதிர் காமத்தோன் இகன்உடைக் கரவேல் காக்க

லகரமே போல் காளிங்கன் நல்லுடல் நெளிய நின்று
தகரமர்த்தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்,
நிகழ் எனை நிருதி திக்கில் நிலை பெறக் காக்க மேற்கில்
இகல் அயில் காக்க, வாயுவினில் குகன் கதிர்வேல் காக்க

வுடதிசை தன்னில் ஈசன் மகன் அருள் திருவேல் காக்க
விடை உடை ஈசன் திக்கில் வேதபோதகன் வேல் காக்க
நடைக்கையில் இருக்கு ஞான்றும் நவில்கையில் நிமிர்கையில், கீழ்க்
கிடக்கையில் தூங்குஞான்றும் கிரி துளைத்து உளவேல் காக்க

இழந்து போகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல்
வுழங்கும் நல் ஊண் உண்போதும் ஆல்விளையாட்டின் போதும்
பழம் சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சு அடங்கும் போதும்
செழும் குணத் தோடே காக்க திடமுடன் மயிலும் காக்க

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில்
வளர் அறுமுகச் சிவன் தான் வந்து எனைக் காக்க காக்க
ஒளி எழு காலை, முன்எல் ஓம்சிவ சாமி காக்க
தெளிநடு பிற்பகல்கால், சிவகுரு நாதன் காக்க

இறகு உடைக் கோழித் தோகைக்கு இறைமுன் இராவில் காக்க
திறல் உடைச் சூர்ப்ப கைத்தே திகழ் பின் இராவில் காக்க

www.manthiras.com

www.manthiras.com

நறவுசேர் தாள் சிலம்பன் நடு நிசி தன்னில் காக்க
மறைதொழு குழகன் எம்கோன் மாறாது காக்க காக்க

இனம் எனத் தொண்ட ரோடும் இணங்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டம் தன்னில் சரவண பவனார் காக்க
நனி அனுபூதி சொன்ன நாதர் கோன் காக்க இத்தைக்
கனிவோடு சொன்னதாசன் கடவுள் தான் காக்க வந்தே

ஷண்முக கவசம் முற்றிற்று

www.manthiras.com